# நெசவுத் தொழில் திணைக்களம்

## 2011 வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டு அறிக்கை

### 01 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சட்டத்திற்கு செய்யப்பட்ட 13ம் திருத்தத்திற்கு அமைய கைத்தறி நெசவுத் தொழில் தொடர்பான விடயம் மாகாண சபையின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள விடயமாகும். அதன் பிரகாரம் நெசவுத் தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருப்பது அவ் விடயத்திற்குரிய கொள்கை ரீதியான தீர்மானங்களும் மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளும் மாகாண சபை நெசவுத்தொழில் பிரிவுடன் இணைந்து செயலாற்றுவதனூடாக தொழிலின் முன்னேற்றத்திற்குரிய சேவைகளை வழங்குதல்.

### 1.1 நோக்கம்

தேசிய தனித்துவத்திற்கும் கலாசாரத்திற்கும் ஏற்றவகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை செயற்பாடுகளினை வெற்றிபெறக்கூடிய வகையில் கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஆக்கபூர்வமான முதல்தர துணி உற்பத்திக்காக உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.

### 1.2 குறிக்கோள்

அரச கொள்கை எல்லைக்குள் கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்காக குறித்த கொள்கையினை தயாரித்தல். அக்கொள்கையினை செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை தேவையான சேவை மற்றும் வசதிகளை வழங்கலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் இணைந்து செயலாற்றுவதனூடாக கைத்தறிநெசவுத்தொழில் துறையில் அளவிலும் தரத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

### 1.3 இலக்கு

01 கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்காக பொருத்தமான கொள்கையை தயார் செய்தல்.

02 உற்பத்தி அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட வேலைத்திட்டத்தினை வழங்குதல்.

- முயற்சியான்மை அபிவிருத்தி செயல்த்திட்டம்
- அலங்கார வேலைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
- பயிற்சிவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம்

03. கைத்தறி நெசவுத்தொழில் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசகர்கள் மற்றும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.

04. துறைக்குத் தேவையான உழைப்பாளர்களை பயிற்றுவித்தல்.

05. விநியோக வளர்ச்சி (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விநியோக நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்)

06. கைத்தறி நெசவுத்தொழிலை விரிவுபடுத்துதலை நோக்காகக் கொண்ட பொருத்தமான வேலைத்திட்டம், சுயதொழில் மற்றும் மேலதிக சேவை வழங்கல் வேலைத்திட்டங்களை ஏற்படுத்துதல்.

07. கைத்தறி நெசவுத்தொழிலில் அலங்கார அபிவிருத்தி மற்றும் பண்புசார் விருத்தியை நோக்காகக் கொண்ட கண்காட்சி மற்றும் போட்டிகள் நடாத்தப்படுதல்.

08. தேசிய கைத்தறி நெசவுத்தொழில் கண்காட்சி நடாத்துதல்.

09. கைத்தறி நெசவுத்தொழிலிற்குத் தேவையான ஆராய்ச்சி பரிசோதனை செய்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

10. புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் மற்றும் பொருத்தமான அபிவிருத்தி நடவடிக்கைகள்.

குறித்த இலக்கை அடைவதற்காக கீழ் குறிப்பிடப்படும் நிறவனம் இத் திணைக்களத்தின் கீழ் தற்போது செயற்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 01. ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம், கடுபெத்த | ~ | 01 |
| 02. நெசவுத் தொழில் நூதனசாலை, கடுபெத்த | ~ | 01 |
| 03. நெசவுத் தொழில் பயிற்சிப் பாடசாலை | ~ | 13 |
| 04. அலங்காரப் பயிற்சிப் பாடசாலை | ~ | 01 |
| 05. இயற்கை நிறங்கள் செயற்திட்டம் ராஜகிரிய | ~ | 01 |

2011/12/31ம் திகதிக்கு திணைக்களத்தின் ஊழியர் சபை

| | | |
|---|---|---|
| 1. நெசவுத்தொழில் பணிப்பாளர் | ~ | 01 |
| 2. ஏனைய உயர் அதிகாரிகள் | ~ | 03 |
| 3. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் ஏனைய ஊழியர் சபை | ~ | 19 |
| 4. திணைக்கள ஊழியர் சபை | ~ | 88 |
| 5. சிற்றூழியர் சபை | ~ | 37 |
| | | ~~~~ |
| | | 148 |
| | | ~~~~ |

**புதிதாக இணைத்துக்கொள்ளல் மற்றும் ஓய்வு பெறல்**

2011ம் ஆண்டினுல் புதிய நெசவுத்தொழில் ஆலோசகர் 06 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் அதிகாரிகள் கீழ் குறிப்பிடப்படும் வகையில் ஓய்வு பெற்றுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| கணக்காளர் | ~ | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | ~ | 01 |
| அ.மு.உ.சேவை | ~ | 01 |
| நெசவு ஆலோசகர் | ~ | 03 |
| சித்திர செய்முறை ஆசிரியர் | ~ | 01 |
| காவற்காரர் | ~ | 01 |

## 02. 2011 வருடத்தின் நிதி சம்பந்தமான வளர்ச்சி

### 2.1 ஒதுக்கீட்டின் உபயோகம்

2011 வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு கீழ் குறிப்பிடப்படும் வகையில் சதவீதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- முழு தேறிய மீண்டெழும் ஒதுக்கீட்டின் சதவீதமாக முழுப் பாவனை 94%
- முழு தேறிய மூலதன ஒதுக்கீட்டின் முழுப்பாவனை 84%

| விடயம் | | முழு தேறிய ஒதுக்கீடு (2011 வருடம்) (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | தேறிய விளைவு மிகுதி/அதிகரிப்பு (ரூபா) | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் செலவுகள் | | | | |
| 1001<br>1002 | தனிநபர் சம்பளங்கள் | 46,350,000 | 42,825,782 | 3,524,218 | 92% |
| 1003 | | | | | |
| | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 13,273,000 | 13,162,108 | 110,892 | 99% |
| | | | | | |
| | மூலதன செலவுகள் | | | | |
| 2001 | கட்டிடமும் நிர்மாணமும் | 4,900,000 | 1,834,382 | 3,065,618 | 37% |
| 2003 | வாகனம் | 1,000,000 | 968,370 | 31,630 | 97% |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 900,000 | 899,936 | 64 | 100% |
| 2401 | பயிற்சியளித்தலும் திறன் விருத்தியும் | 17,300,000 | 16,587,312 | 712,688 | 96% |

## 2.2 வருமானக் கணக்கு

நெசவுத் தொழில் திணைக்களம் சேவை வழங்கும் நிறுவனமொன்று என்பதனால் விசேட வருமானம் இல்லை.

## 2.3 அரச அதிகாரிகளின் முற்பண பீ கணக்கின் செயற்பாடு

| | உச்ச வரவு எல்லை ரூபா | குறைந்த கிடைக்கும் எல்லை ரூபா | உச்ச வரவு மீதி எல்லை ரூபா |
|---|---|---|---|
| வருடாந்த பகிர்வுக் கணக்கின் எல்லை | 7,400,000 | 3,200,000 | 32,200,000 |
| வருடாந்த உண்மைச் செலவுகள் | 4,033,391 | 5,421,688 | 19,266,104 |

## 3 வருடாந்த செயற்பாடுகள்

| | வருடாந்த திட்டத்திற்கமைய எதிர்பார்த்த இலக்கின் அளவு | உண்மையான வளர்ச்சி |
|---|---|---|
| 3.1 நெசவுத் தொழில் நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தில் அறைகளை பிரித்தல் கடுபெத்த ஆராய்ச்சி, பயிற்சி, அலங்கார மற்றும் சேவை நிறவனத்தினை திருத்துதல் மற்றும் நெசவு பாடசாலையை திருத்துதல். | நிறவனம் 15 | நிறுவனம் 10 |

### 3.2 வலுவூட்டும் பிரிவு தொடர்பான நடவடிக்கைகள்

திணைக்களத்திலிருந்து தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ள வலுவூட்டும் நிறுவனம் தொடர்பான நடவடிக்கை மற்றும் அந் நிறவனங்களில் இருந்து தொழில் இழந்த ஒய்வூதியம் மற்றும் இழப்பீடு கையளிக்கின்ற அதிகாரிகள் தொடர்பான நடவடிக்கைகள் இப் பிரிவினூடாக செயற்படுத்தப்படும்.

1980/81/82 தனியார் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்ட நெசவு தொழில் திணைக்களத்திற்குரிய வலுவூட்டும் வியாபார நிறுவனங்களில் சேவை செய்கின்ற 10 வருடத்திற்கு குறைந்த ஊழியர்களிற்கான இழப்பீட்டுத் தொகையொன்று வழங்குவதற்காக 2011.04.11 திகதி பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டது. அதற்கான விண்ணப்பப்படிவங்கள் 5000ற்கும் மேலதிகமாக கிடைத்ததுடன் அவ் விண்ணப்பப்படிவங்களை பரிசீலனை செய்து பொருத்தமான வலுவூட்டல் வியாபாரத்திற்கு ஆவணப்படுத்துதல் மற்றும் அவர்களிற்கு இழப்பீட்டை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான தகவல்களை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 3.3 நெசவுத்தொழில் பயிற்சி செயற்திட்டம்

- நெசவுத்தொழில் பயிற்சி பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்து பயிற்சியளித்தல்

நெசவுத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்ற நெசவுத்தொழில் பயிற்சி பாடசாலை 13 ஊடாக நெசவுத்தொழில் தொடர்பான அடிப்படைப் பயிற்சிப் பாடநெறி மற்றும் இரண்டு வருட பயிற்சி பாடநெறியினூடாக குறித்த பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல்.

நெசவுத்தொழில் திணைக்களத்தில் செயற்படுத்தப்படுகின்ற நெசவுத்தொழில் பயிற்சி பாடநெறி.

I. வடபுலுவ கைத்தறி நெசவு நிலையம்
II. பண்டாரவெல கைத்தறி நெசவு நிலையம்
III. சாந்திபுர கைத்தறி நெசவு நிலையம்
IV. மாத்தளை கைத்தறி நெசவு நிலையம்
V. மாத்தறை கைத்தறி நெசவு நிலையம்
VI. கிரம கைத்தறி நெசவு நிலையம்
VII. பின்னவல கைத்தறி நெசவு நிலையம்
VIII. போயகனே கைத்தறி நெசவு நிலையம்
IX. ஹிரமடகம கைத்தறி நெசவு நிலையம்
X. கெட்டம்பே கைத்தறி நெசவு நிலையம்
XI. கடுபெத்த கைத்தறி நெசவு நிலையம்
XII. நல்லூர் கைத்தறி நெசவு நிலையம்
XIII. சம்மாந்துறை கைத்தறி நெசவு நிலையம்
XIV. அலங்கார பயிற்சிப் பாடசாலை, கடுபெத்த

நெசவுப் பாடசாலைகளுக்காக 2011/2012 வருடத்திற்காக மாணவர்கள் 200 பேர் வருடாந்தம் சேர்த்துக் கொள்ள உத்தேசித்திருந்ததுடன், சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய மாணவர்களின் தொகை 156 பேர் ஆகும்.

## 4 கைத்தறி நெசவுத் தொழில் விற்பனை மேம்படுத்தல் வேலைத்திட்டம்

- தேசத்திற்கு மகுடம் சூட்டுதல் தேசிய அபிவிருத்தி கண்காட்சி

  2011 பெப்ரவரி மாதம் புத்தலயில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் சூட்டுதல் தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் கைத்தறி நெசவுத் தொழில் படைப்பு உள்ளடங்கிய கண்காட்சிக் கூடமொன்று நடைபெற்றது.

- கைத்தறி துணி விற்பனை சந்தைகள் நடாத்துதல்

  இலங்கையில் கைத்தறி துணிகளுக்கான அதிக கேள்வியை ஏற்படுத்தலும் மக்களிடையே கைத்தறி துணி பிரசித்திபெறுவதை நோக்காகவும் கொண்டு தேசிய கைத்தறி துணி கண்காட்சிக்கு முன்மாதிரியான விற்பனை சந்தை 2011 செப்டம்பர் மாதம் 01,02,03 திகதிகளில் ஜூபிலி மண்டபத்தில் நடைபெற்றது.

- கைத்தறி நெசவுத்தொழிலிற்குரிய பிரச்சினைகளிற்கு தீர்வு காண்பதற்காக மாகாண சபை , மத்திய அரசுகளுக்கிடையிலான தொடர்பினை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு மாகாண நெசவுத்தொழில் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்களுக்கான கருத்தரங்கொன்று நெசவுத்தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தில் நடைபெற்றது.

- கைத்தறி துணி போட்டிகள் மற்றும் தேசிய கண்காட்சி

கைத்தறி நெசவுத்தொழிலின் தரத்தினை உயர்த்துதலிற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனை சந்தையை நோக்காகக் கொண்டு உள்நாட்டு துணிகளை வடிவமைத்து கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஈடுபடுகின்றவர்களின் திறமைகளை முன்னேற்றுதல் , ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் திறமைகளை மதிப்பிடுவதற்காக தேசிய கண்காட்சி மற்றும் விருது வழங்கும் வைபவம் 2011 டிசெம்பர் மாதம் 17ம் திகதியிலிருந்து 24ம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கண்காட்சிக் கூடம் மற்றும் விற்பனை கூடங்களில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் நாடகம், இசை போன்ற கலாசார நிகழ்ச்சிகளினூடாகவும் கண்காட்சி அலங்காரமாக அமைந்தது.

## 5 சேவையில் பயிற்சி செயற்திட்டம்

நெசவுத் தொழில் முகாமையாளர்கள், முயற்சியான்மையாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் வரை சென்றடையும் வகையில் நெசவுத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி வேலைத்திட்டம் மற்றும் கருத்தரங்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் இதன் கீழ் நடைபெறும்.

நெசவுத் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சபை, மாகாண அரசு, கூட்டுறவு, தனியார் பிரிவுகளின் கைத்தறி நெசவுத் தொழில் துறையில் உள்ளடக்கப்படுபவர்களின் வினைத்திறனை மேம்படுத்துதலை நோக்காகக் கொண்டு வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கமைய 12 பாடநெறிகளை நடாத்த திட்டமிட்டு இருந்ததுடன் அதில் 05 ந்து 2011ம் வருடத்தில் நடாத்தப்பட்டது.

| பயிற்சி வேலைத்திட்டம் | உத்தேச குழு |
|---|---|
| 1. உற்பத்தித்திறன் பயிற்சி வேலைத்திட்டம் | பிரதான அலுவலகத்தின் அதிகாரிகளுக்காக |
| 2. கலையுணர்வு மற்றும் தரத்தினை உயர்துதல் | நெசவுப் பாடசாலை மாணவ மாணவர்களுக்காக |
| 3. இயற்கை நிறப் பயிற்சிப் பாடநெறி | மாகாண சபை மற்றும் தனியார் பிரிவுகளில் இத் துறையில் ஈடுபாடுள்ளவர்களுக்காக |
| 4. தரத்தினை ஊக்குவிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் | நெசவுப் பாடசாலை மாணவர்களுக்காக |
| 5. மனப்பாங்கு,திறமை,ஆளுமை வளர்ச்சி, செயல்நிலை வளர்ச்சி வேலைத்திட்டம் | நெசவுப் பாடசாலை மாணவர்களுக்காக |

6 வருடாந்த நெசவு பரீட்சை நடாத்துதல்

2011 வருடத்தில் நடாத்தப்படுவதற்கு உத்தேசித்திருந்த நெசவுத்தொழில் இரண்டு வருட பாடநெறியின் முதலாம் மற்றும் இரண்டாம் வருட பரீட்சை 2011 செப்டெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்டது.

7 உத்தேசிக்கப்பட்டிருந்ததன் பிரகாரம் நெசவுத் தொழில் பயிற்சி பாடசாலை 12இற்கும் அலங்கார நிறுவனம் 02ற்குமாக 14 கணனிகள் புதிதாக பெற்றுக்கொடுக்கப்பட்டது.

8 கைத்தறி நெசவுத்தொழிலினை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு நெசவுத் தொழில் துறையை பிரதிபலிக்கும் வகையில் 15 நிமிட நாடகமொன்று தயாரித்து ஒளிபரப்பப்பட்டது.

9 நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலைக்குத் தேவையான நூல் மற்றும் கைத்தறி உபகரணங்கள் விலைக்கு வாங்கப்பட்டன.

10 நெசவுத்தொழில் பயிற்சி பாடசாலைகளில் நெசவுதொழில் பயிற்சி பாடநெறியைப் பயிலுகின்ற மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்ற ஆங்கிலப் பயிற்சிப் பாடநெறி 2011 வருடத்தினுல் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

11 நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களிற்காகவும் வருடத்திற்கு 02 சீருடைகள் வீதம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.